# திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# 2024-12-01

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்* 33:14-16,

*பதிலுரைப்பாடல் திபா* 25:4-5, 8-9, 10,14,

*கிறிஸ்துவின் வருகைக்கென்று திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 3:12-4:2,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 21: 25-28, 34-36)

***திருப்பலி முன்னுரை***

*மேன்மைக்குரியவர்களே, திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்பு டன் அழைக்கிறோம். புதிய திருவழிபாட்டு ஆண்டின் முதல் நாளாகிய இன்று, ஆண்டவ ரின் இரண்டாம் வருகையைப் பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். மண்ணுலகில் நிலவும் குழப்பமும், விண்வெளியில் தோன்றும் அடையாளங்களும் ஆண்டவரின் வருகையை முன்னறிவிக்கும் என இயேசு முன்னறிவித்துள்ளார். நமது மீட்புக்காக நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டுமென இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கு எப்பொழுதும் விழித்திருந்து மன்றாடுபவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பு இறைவா!*

*திருஅவை இன்று தொடங்கும் திருவழிபாட்டு ஆண்டில் எம் திருத்தந்தைத் தொடங்கி பொதுநிலையினர் வரை அனைவரும் உமது வருகையைத் தகுந்த முறையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இக்காலத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*இளைஞர்கள் தங்கள் வாழ்வில் நற்சிந்தனைகளை உடையவர்களாகவும் விசுவாச வாழ்வில் நிலைபெறவும் உமது பிள்ளைகள் என்று சான்று பகரவும் வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*வருகின்ற கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைத் தகுந்த தயாரிப்புடன் சிறப்பிக்கவும், ஏழை எளியோருக்கு உதவிடவும் வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*நாங்கள் ஏழை, பணக்காரன், படித்தவர்கள், படிக்காதவர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் ஒன்று போல் அன்பு செய்து வாழ்பவர்களாக எம்மை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*இக்காலக்கட்டத்தில் மன அமைதியின்றித் தவிக்கும் மக்களைக் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் வேண்டுதல்களுக்குச் செவிகொடுத்து, அவர்களுக்கு மன அமைதியைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மகிமை நிறைந்தவராம் இறைவா,*

*உமது மாட்சிக்கு எதிரான சிலை வழிபாடுகள் அனைத்தும் எம் நாட்டு மக்கள் நடுவில் இருந்து ஒழியவும், உண்மை இறைவனாகிய உம்மை அறிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வம் கொள்ளவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*மேன்மை நிறைந்தவராம் இறைவா,*

*உம் திருமகனின் வருகைக்காக எப்பொழுதும் விழித்திருந்து மன்றாடுபவர்களாய் வாழும் வரத்தை, எங்கள் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவ ருக்கும் வழங்கி, உடல், உள்ள, ஆன்ம சுகத்தோடு பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*